# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 224/ந/2024, நாள் 11 .09.2025

திரு. A.D. சுனில்,
கொல்லங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கொல்லங்கோடு நகராட்சி, கன்னியாகுமரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு (அஞ்சல்), சூழால் ஜங்சன், சுனில் பவன், கதவு எண்.4/38E என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.D. சுனில் என்பவரது 30.10.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2024 அன்று பெறப்பட்டு, 224/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு (அஞ்சல்), சூழால் ஜங்சன், சுனில் பவன், கதவு எண்.4/38E, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.D. சுனில் என்பவரின் 30.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலூகா கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு அணுகோடு படிப்பகம் அருகில் ஒரு பட்டுபோன மாமரம் பல நாட்களாக பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உயிர் ஆபத்து ஏற்படுத்தும் விதமாக உள்ளது. இதை தொடர்ந்து சம்மந்தப்பட்ட [5–வது வார்டு] கொல்லங்கோடு நகராட்சியில் தகவல் தெரிவித்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. இதைத் தொடர்ந்து பலத்த காற்றின்போது பட்ட மாமரத்திலிருந்து ஒரு கிளை முறிந்து அருகில் நின்ற மின்சார கம்பியின் மீது பயங்கர சத்தத்துடன் தீ பிடித்தபடி விழுந்தது. அதில் 3–வயது சிறுமி மயிரிழையில் உயிர் தப்பினார்.

இதைத் தொடர்ந்து மின்சார வாரியத்தினர் வந்து மரத்தை வெட்டிமாற்றாமல் புதிய மின்கம்பத்தை மட்டும் நட்டுவிட்டு சென்றனர். இந்த நிலையில் மீண்டும் மின்சார கம்பிகளுக்கும், அருகில் குடியிருக்கும் குடியிருப்பு வாசிகளுக்கும் ஆபத்தான நிலையில் மரம் நிற்கிறது. அதிகாரிகளால் எந்த நடவடிக்கையும் இந்நாள் வரை இல்லை. இந்த நிலையில் 24–10–2024 அன்று மீண்டும் அந்த பட்ட மரத்திலிருந்து ஒரு கிளை முறிந்து பத்மநாபன் நாயர் S/o. திவாகரன் நாயர் அவரது வீட்டின் முன் விழுந்து 40 அடி கொண்ட அவரது வீட்டு மதில் சுவர் முற்றிலும் சேதம் ஆனது. இதில் ஒரு லட்ச ரூபாய்கு மேல் சேதம் ஆனது. ஆகவே இந்நாள் வரை நகராட்சி சார்பில் எந்த நடவடிக்கையும் இல்லாததால் தமிழ்நாடு முறைமன்ற நடுவரிடம் இப்புகாரை பணிந்து சமர்ப்பிக்கிறேன். மேற்படி புகாருக்கு நடவடிக்கை எடுத்து உரிய இழப்பீடு பெற்று தந்து மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த காத்திருக்கும் மரத்தை அப்புறப்படுத்த தங்களை தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரது புகார் குறித்து கொல்லங்கோடு நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 27.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) கொல்லங்கோடு நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை பெறப்படாத நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கொல்லங்கோடு நகராட்சி ஆணையரை அறிக்கையுடன் 15.07.2025 அன்று நடைபெறவுள்ள

விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) இதனைத் தொடர்ந்து கொல்லங்கோடு நகராட்சி ஆணையர் தனது 14.07.2025 நாளிட்ட கடிதம் எண். 2516/2024/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

“திரு. A.D. சுனில், கொல்லங்கோடு என்பவரின் 30.10.2024–ம் தேதிய முறையீட்டு மனு மீது உரிய பரிசீலனை மேற்கொண்டு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதில் மனுதாரர் அளித்துள்ள புகார் சம்மந்தப்பட்ட பகுதி நீர்வள ஆதார அமைப்பிற்கு சம்மந்தமான இடம் என்பதாலும் மேல் நடவடிக்கைகாக கொல்லங்கோடு நகராட்சியின் 25.11.2024 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2516/ 2024/எப்1–ன் வாயிலாக உதவி பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, குழித்துறை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்படி அப்பகுதியில் இருந்த பட்டு போன மாமரம் ஆனது அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களிடமும் (ம) மனுதாரரிடமும் விசாரணை செய்ததில் தெரிய வந்தது என்பதை இதன் மூலம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் திரு. A.D. சுனில் என்பவர் 15.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர் மனுதாரரான கொல்லங்கோடு நகராட்சி ஆணையரின் 14.07.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண். 2516/2024/எப்1–ல் தனக்கு பதிலாக கொல்லங்கோடு நகராட்சி மேலாளர் திரு. ஆர். பேச்சிக்குமார் என்பரை விசாரணைக்கு ஆஜராக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதின் பேரில் 15.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கொல்லங்கோடு நகராட்சியில் மேலாளராக பணிபுரியும் திரு. ஆர். பேச்சிக்குமார் என்பவர் இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, அணுகோடு படிப்பகம் அருகில் பட்டுபோன மாமரத்தினை அகற்றக்கோரி கொல்லங்கோடு, சூழால் ஜங்சன், சுனில் பவன், கதவு எண்.4/38E–ல் வசித்து வரும் திரு .A.D. சுனில் என்பவர் மனு அளித்திருந்தார். மேற்படி மரத்தினை ஸ்தல ஆய்வு செய்கையில் மேற்படி மரம் நகராட்சி பகுதியில் பொதுப்பணித்துறை சாலையில் உள்ளதால் மேற்படி மரத்தினை அகற்றிட பொதுப்பணித் துறையினை நகராட்சியால் கேட்டுக்கொண்டதன்படி மேற்படி மரம் தற்போது பொதுப்பணித் துறையினரால் அகற்றப்பட்டு விட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் 15.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகததால் மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் 26.08.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் கலந்து கொள்ளுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கொல்லங்கோடு நகராட்சி ஆணையர் ஆகியோர்க்கு இம்முறை மன்ற நடுவத்தின் 04.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மனுதாரர் 26.08.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையிலும் ஆஜராகவில்லை.

9. எதிர் மனுதாரரான கொல்லங்கோடு நகராட்சி ஆணையரின்12.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2516/2024/எப்1–ல் தனது சார்பில் கொல்லங்கோடு நகராட்சியில் மேலாளராக பணி புரியும் திரு. ஆர். பேச்சிக்குமார் என்பவர் 26.08.2025 அன்று முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 26.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கொல்லங்கோடு நகராட்சி மேலாளர் நேரடியாக ஆஜராகி இம்முறை மன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, அணுகோடு படிப்பகம் அருகில் பட்டுப்போன மாமரத்தினை அகற்றக்கோரிய மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்படி பட்டு போன மாமரம் பொதுப்பணித்துறையினரால் அகற்றப்பட்டுவிட்டது என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான கொல்லங்கோடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான கொல்லங்கோடு நகராட்சி மேலாளரின் வாக்குமூலங்கள்

மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு, அணுகோடு படிப்பகம் அருகில் பட்டுபோன மாமரம் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதமாக உள்ளதாகவும், பலத்த காற்றின்போது மேற்படி பட்டுபோன மரத்தின் கிளை முறிந்து அருகில் நின்ற மின்சார கம்பியின் மீது பயங்கர சத்தத்துடன் தீ பிடித்தபடி விழுந்ததாகவும், மீண்டும் ஒரு பகுதி முறிந்து அருகில் குடியிருப்பவரின் வீட்டு மதில் சுவற்றின் மீது விழுந்து மதில் சுவர் முற்றிலும் சேதம் அடைந்ததாகவும் தெரிவித்து, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ள பட்டுப்போன மரத்தை அப்புறப்படுத்துமாறு மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள பட்டுபோன மாமரத்தினை ஸ்தல ஆய்வு செய்கையில் மேற்படி மரம் நகராட்சி பகுதியில் பொதுப்பணித்துறை சாலையில் இருந்ததாகவும், நகராட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி மரம் பொதுப்பணித் துறையினரால் அகற்றப்பட்டு விட்டதாகவும் கொல்லங்கோடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் சார்பில் ஆஜரான கொல்லங்கோடு நகராட்சி மேலாளரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறியவருகிறது.

இதுபோன்ற நிகழ்வுகளில், சுமார் எட்டு மாதங்கள் கழித்து புகார் மனு மீது அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ள கொல்லங்கோடு நகராட்சி ஆணையரின் மெத்தன போக்கினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள பட்டுபோன மாமரம் பொதுபணித்துறையினரால் அகற்றப்பட்டுவிட்டதாக கொல்லங்கோடு நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஆணையரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A.D. சுனில்,
த/பெ. அருள்ராஜ்,
4/38 E, சுனில்பவன், சூழால் ஜங்சன்,
கொல்லங்கோடு (அஞ்சல்), கன்னியாகுமரி மாவட்டம்.
2) நகராட்சி ஆணையர்,
கொல்லங்கோடு நகராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உ.கிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

செயலாளர். 12/9/25